# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# இயேசு பன்னிரெண்டு பேரை உதவிசெய்வதற்காக தெரிந்துகொண்டார்

எழுதியவர் : Edward Hughes
சித்தரிப்பவர் : Byron Unger; Lazarus
மொழிபெயர்ப்பாளர் : Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர் : E. Frischbutter; Sarah S.

**கதைகள்** 60 **ல் 39**

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*

உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

Tamil

இயேசு ஆச்சரியமான காரியங்களை செய்தார். இயேசு வியாதியை சுகமாக்கினார், கஷ்டப்பட்ட மக்களுக்கு மனதிலே, இருதயத்திலே சமாதானத்தை கொடுத்தார், மற்றும் தேவனுடைய வார்த்தையை போதித்தார்.





உதவியும், சுகமும் பெற, திரளான ஜனங்கள் இயேசுவிடம் வந்தார்கள்.




தன்னைப் பின்பற்றி வருகிறவர்களில் பன்னிரெண்டு பேரை
தெரிந்து கொண்டு, தன்னுடைய வேலையில் உதவி செய்ய
வைத்துக்கொள்ள முடிவு செய்தார்.
3


நீங்கள் மிகவும்
முக்கியமான முடிவு
எடுக்கும்போது,
தேவனிடத்தில்
வேண்டுதல்
செய்வீர்களா?
இயேசு செய்தார்!
4


அமைதியான
மலைப்பகுதிக்கு
சென்று,
தன்னுடைய
பரலோக
பிதாவினிடத்தில்
பேசினார். சூரியன்
அஸ்தமிக்கும்வரை
இயேசு செய்தார்.
5


இயேசு இரவு
முழுவதும்
இருட்டிலே
ஜெபித்தார்.
6


காலையிலே, தனக்கு ஊழியம் செய்து
கீழ்ப்படிந்த நண்பர்களையெல்லாம் தன்னை
பின் செல்பவர்களாக அழைத்தார்.
7


அவர்களில் பன்னிரெண்டு பேரை தனக்கு
உதவிக்காரர்களாக அல்லது அப்போஸ்தலராக
தெரிந்து கொண்டார்.
8

சீமோன் பேதுரு மற்றும் அந்திரேயா, என்ற சகோதரர்களை இயேசு முதலாவதாக தெரிந்தெடுத்தார். முதலாவதாக இயேசு தங்களை அழைத்தபோது, தங்களுடைய மீன் பிடிக்கிற வேலையை விட்டுவிட்டு இயேசுவை பின்பற்றினார்கள்.



9

யாக்கோபும், யோவானும், செபதெயுவின் குமாரர்கள், தங்களுடைய மீன் வலையை விட்டுவிட்டு அவர்களும் பின் சென்றார்கள்.



10

பிலிப்பு, பர்த்தொலேமேயு, மத்தேயு, தோமா, செலோத்தே என்னப்பட்ட சீமோன், அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, யாகோபுவின் குமாரனாகிய யூதா மற்றும் இயேசுக்கு எதிரியாக மாறிய யூதாஸ்காரியோத்து.



11

இயேசு போதித்தது என்னவென்றால் ஒருவன் அவருடைய வார்த்தையை கேட்டு அதன்படி செய்தால், வீட்டை திடமான அஸ்திபாரத்தில் கட்டுவதற்கு சமம்.



12

கடும் புயல் காற்று வீசினாலும் அந்த வீட்டை இடிக்கமுடியாது.



13

அவருடைய வார்த்தையை கேட்டு அதின்படி செய்யாதவர்கள் மணலை அஸ்திபாரமாக வைத்து வீடு கட்டுபவர்களுக்கு சமானம். கடும் புயல் வீசும்போது அந்த வீடு இடிந்துபோகும்.



14


இயேசு கற்பித்த சில கட்டளைகள்
கஷ்டமாக இருந்தன, "உன்னை
ஒருவன் வலது கன்னத்தில்
அடித்தால் அவனுக்கு
இடது கன்னத்தையும்
காட்டு," என்று
போதித்தார்.
15


"உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்."
இயேசுவைப் போல வாழ்வதற்கு
மக்களுக்கு தேவனுடைய
உதவி தேவை.
16


சில மதகுருக்கள் தங்கள்
ஜெபத்தை மற்றவர்கள் காண
காண்பிப்பதுபோல, நீங்கள்
செய்யாதீர்கள். உங்கள் வேண்டுதல்
இரகசியமாயிருக்கட்டும் என்று
இயேசு சொன்னார்.
17


தேவன் தம்மை
நம்புகிறவர்களை
உணவளித்து,
உடுத்துவிப்பார் என்று
இயேசு சொன்னார்.
18


தேவன் ஆகாயத்து
பறவைகளுக்கு உணவையும்,
பூவுக்கும் செடிகொடிகளுக்கும்,
வண்ணத்தையும்
கொடுப்பதினாலே, ...
19


... தேவனுடைய
பிள்ளைகள் தங்களுடைய
தேவைகளுக்காக தேவனை
விசுவாசிக்கலாம் என்றார்.
20













இயேசு பன்னிரெண்டு பேரை உதவிசெய்வதற்காக தெரிந்துகொண்டார்

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

மத்தேயு 4-7, மாற்கு 1, லூக்கா 6

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.